செயல்திட்ட சுருக்க வரைவு

# சுற்றுச்சூழல் தாக்க துரித கணிப்பு அறிக்கை
# மற்றும்
# சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்

**சிப்காட் தொழிற் பூங்கா**
தேர்வாய்கண்டிகை, தமிழ்நாடு - 601 202.




திட்ட அமலாக்குனர்

## மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
சென்னை - 600 008

திட்ட வரைவாளர்கள்

**சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் ஆபத்தின்மை காப்பு மையம்**
அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர் - 608 002

&

**இட்காட் ஆலோசனை மற்றும் சேவை நிறுவனம்**
50-A, கிரீம்ஸ் சாலை, சென்னை - 600 006

# சுற்றுச்சூழல் தாக்க துரித கணிப்பு அறிக்கை

## சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்

### செயல் திட்ட சுருக்க வரைவு

## சிப்காட் தொழிற் பூங்கா

தேர்வாய் கண்டிகை
கும்மிடிபூண்டி -தாலுக்கா
திருவள்ளூர் மாவட்டம்

**திட்ட அமலாக்குனர்**

**மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம்**
**தமிழக அரசு**
**சென்னை.**

**திட்ட வரைவு**

சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் ஆபத்தின்மை காப்பு மையம்
அண்ணாமலை பல்கலைக்கழகம்
&

இட்காட் கன்சல்டன்சி & சர்வீசஸ் லிமிடெட்
50/ஏ கிரிம்ஸ் சாலை, சென்னை - 600 006.

## செயல் திட்ட சுருக்க வரைவு

### 1.1. முன்னுரை

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தேர்வாய் கண்டிகை எனும் ஊருக்கு அருகில், 1127 ஏக்கர் இடத்தினை தமிழக அரசிடமிருந்து, ஒரு புதிய தொழில் பூங்காவை அமைத்திட பெற்றிருக்கிறது. இந்த நிலத்தினை தேவையான அரசு அனுமதி மற்றும் கட்டமைப்புகள் ஏற்படுத்தி தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு ஏதுவாக சிறுசிறு தொழிற் மனையாக பிரித்து நீண்ட கால குத்துகைக்கு (99 ஆண்டுகளுக்கு) தொழில் நிறுவனங்களுக்கு தர SIPCOT ஏற்பாடு செய்து வருகிறது.

தொழில் பூங்கா அமைய இருக்கம் இடத்தினை சார்ந்து இருக்கும் மக்களின் முன்னேற்றம் குறித்து SIPCOT நீண்ட கால திட்டம் ஒன்றினை தயாரித்துள்ளது. புதியதாக அமைய இருக்கும் தொழிற்சாலை நிர்வாகங்களின் கூட்டு முயற்சியுடன், SIPCOT தொழில் பூங்கா மற்றும் அதை சார்ந்த பகுதிகளின் இயற்கை வளங்கள் மற்றும் சமூக வளர்ச்சிக்கு தேவையான அனைத்து செயல்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள உறுதி கொள்கிறது.

### 1.2. சிப்காட் தொழில் பூங்கா - திட்ட அமைவிடம்

தமிழ்நாட்டில் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி தாலுக்காவில் தேர்வாய் கண்டிகை கிராமத்தில் சிப்காட் தொழிற் வளாகம் அமைய உள்ளது. தொழிற் வளாக அபிவிருத்திக்கு தேர்வான இடம் அரசுக்கு சொந்தமான காலியான, ஆக்கிரமிப்புகள் இல்லாத மற்றும் குடியிருப்புகள் ஏதும் அல்லாத புறம்போக்கு நிலமாகும். தொழிற் வளாகத்திற்கு என கண்டறியப்பட்ட நிலப்பரப்பானது சுமார் 1127 ஏக்கர் (456.27 ஹெக்டர்) ஆகும். அரசு வருவாய் பதிவேட்டின்படி இந்த முழு நிலப்பரப்பும் "மேய்ச்சல் புறம்போக்கு" என குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலங்களை விலைகொடுத்து வாங்கவோ அல்லது கையகப்படுத்தவோ தேவை இல்லை. குடியிருப்புகள் ஏதும் இல்லாததால் மறு குடியேற்றமோ மற்றும் சமூக புரனமைப்போ தேவையற்றதாகிறது.

புதிய தொழில் பூங்கா அமைய தேர்வான இடத்தினை **படம் 1.1-ல்** காண்க.

## SIPCOT INDUSTRIAL PARK
THERVOYKANDIGAI




**FIG.1.1 KEY PLAN LOCATION OF IE**
SCALE 1 : 50,000

திட்ட அமைவிடமும் அதனை சுற்றியுள்ள 10 கி.மீ. சுற்றளவில் உள்ள பௌதீக சிறப்பியல்புகளை திட்ட வரைவு **படம் 1.2-ல்** காண்க.

திட்ட அமைவிடமானது பூலோக அளவில் கீழ்கண்டபடி அமைந்துள்ளது.

திட்டத்தின் அட்சரேகை அளவு : 13°21′ 31′ N - 13°22′ 80″ N

திட்டத்தின் தீர்க்க ரேகை அளவு : 79° 58′ 41″E - 79°59′ 49′ E

தேர்வான இடம், கடல் மட்டத்திலிருந்து சுமார் 50 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

திட்ட அமைவிடத்தின் தெற்கே பாதுகாக்கபடும் காடுகளும், மேற்கே மற்றும் கிழக்கே வரண்ட நிலங்களும் உள்ளன. பாதுகாக்கப்பட வேண்டிய எந்த அாய உயிர் வகைகள் ஆய்வுகளில் கண்டறியப்படவில்லை.

திட்ட அமைவிடம் சென்னையிலிருந்து சுமார் 51 கி.மீ தொலைவில் உள்ளது. இந்த அமைவிடம் "சென்னை ஆதாயம்" என்ற பலத்த ஆதாரத்தை தன்னகத்தே பெற்றுள்ளது. அதோடு அல்லாமல் சென்னையின் தொழிற் வளர்ச்சியை சீரமைக்கவும் உதவுகிறது.

**1.3. அமைவிடத்தின் நன்மைகள்**

வன உயிர் பாதுகாப்பு சட்டம் 1972ன்படி, எந்த ஒரு சிறப்பமை உயிரியல் இடங்களான தேசிய பூங்காவோ, வனவாழ் புகலிடமோ, புலிகள் சரணாலயமோ, பறவைகள் சரணாலயமோ, சதுப்பு நிலங்களோ, ஈர நிலங்களோ, தாவரம் மற்றும் விலங்கியல் தோட்டங்களோ, தேர்வாய் கண்டிகையிலும் அதனை சுற்றியுள்ள 10 கி.மீ. சுற்றளவுள்ள திட்ட பாதிப்பு நில பரப்புகளிலும் காணப்படவில்லை.

இருந்தபோதிலும், பல சிறிய அளவிலான பாதுகாக்கப்படும் வனப் பகுதிகள் திட்ட பாதிப்பு பரப்பில் உள்ளன. சிப்காட் பாதுகாக்கப்படும் காடுகளை கையகப்படுத்தாமல் இருப்பது மற்றும் அதனைசார்ந்த எந்த உயிரியல் தன்மைக்கும் எதிரான செயலை தடுத்து நிறுத்துவது என்றும் உறுதி பூண்டுள்ளது.

சிறப்பமை நீர் ஆதாரங்கள், கடல் சார்ந்த நிலப் பகுதிகள், நினைவுச் சின்னங்கள், மற்றும் மரபுரிமை சின்னங்கள் எதுவும் திட்ட பாதிப்பு நில பரப்பில் இல்லை.

SIPCOT INDUSTRIAL PARK

THERVOYKANDIGAI




FIG.1.2 PROJECT IMPACT MAP (10 KM RADIUS)

மற்றய தேர்விடங்களை காட்டிலும், தேர்வாய் கண்டிகையை திட்ட அமைவிடமாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான நன்மை பயக்கும் சமூக பொருளாதார காரணிகள் ;

- அரசு நிலம்
- குடியிருப்புகள் ஏதுமில்லாதது
- உடனடி பயன்பாட்டிற்கு இருப்பது
- நிலங்களை வாங்கும் அவசியம் இல்லை
- சென்னைக்கு அருகாமையில் (சுமார் 51 கி.மீ.)
- நீர் ஆதாரம்
- SIPCOT கும்மிடிபூண்டி அருகாமை
- அருகாமை சாலைகள் $SH_{50}$, $SH_{51}$, $SH_{52}$, $NH_5$, MDR, ODR
- மற்றும் கிராமப்புற சாலைகள்

தேர்வாய் கண்டிகை அமைவிடத்தின் இட தகுதிக்கான இட அணிக்கோவை **அட்டவணை 1.1-ல்** குறிப்பிடபட்டுள்ளது.

**1.4. தற்போதைய சுற்றுச்சூழல் தன்மைகளின் கணிப்பு**

விரிவான சுற்றுச்சூழல் ஆய்வு, தொழில் பூங்கா அமையவிருக்கும் தேர்வாய் கண்டிகை மற்றும் அதனை சுற்றியுள்ள 10 கி.மீ. சுற்றளவில் ஜனவரி - மார்ச், 2010 நடத்தப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவுகள் முறைமை படுத்தப்பட்டு, முக்கிய மற்றும் சிறப்பு கவனத்துக்கான காரணிகள் **அட்டவணை எண் 1.2-ல்** தரப்பட்டுள்ளது.

**1.5. தொழிற்பேட்டை உறுப்பு நிறுவனங்கள்**

இத்தொழிற்பேட்டை ஆனது கீழ்கண்ட மூன்று வகையான தொழிற்சாலையை மேம்படுத்துவதற்காக முன்மொழியப்படுகிறது.

- செயற்கை ரப்பர்
- கண்ணாடி
- பொறியியல் உற்பத்தி

அட்டவணை 1.1

**SITE MATRIX FOR PROJECT SUITABILITY**
**THERVOY KANDIGAI, GUMMIDIPOONDI TALUK**

| | | |
|---|---|---|
| **ENVIRONMENTAL PARAMETERS** | | |
| Distance to sensitive zones | Weightage | Nil |
| | Justification | Not applicable |
| Suitability to air Polluting Industries | Weightage | Nil – No Significant Air Pollution |
| | Justification | Synthetic Rubber, Glass and Engineering industries only. None of them are air polluting in classification |
| Suitability to water Polluting Industries | Weightage | Nil-Water Requirement is only **4.5 MLD** (**5KL/acres** ) |
| | Justification | None of the proposed industry require more water and characterized as water polluting industries |
| **PHYSICAL INFRASTRUCTURE PARAMETERS** | | |
| Availability of water and nearness to water supply source | Weightage | Chennai Metro water |
| | Justification | Since the water requirement is less at 4.5 MLD only, it is decided to source from the tank through me to water (Government of TamilNadu) |
| Availability of effluent disposal places | Weightage | Not Applicable |
| | Justification | All member Enterprises will be mandated to put up **Zero Liquid Discharge** based **Effluent Treatment Plants** and will Completely recycle or reuse the treated effluent in the process, utilities and Green Belt Development. |
| Nearness to Road | Weightage | Palavakkam – KKK Road (ODR) 2.0 Km from west side, K.S. Road – Thervoy (Village Road) 6.4Km from North side, National Highway NH5 – 21.0 Km from East side, Kostaliyur Bridge –Puthur Road – 5.0km from South Side. |
| | Justification | A Straight approach to enter the IE site is available through K.S.Road – Thervoykandigai(Village Road). It is proposed that it will be suitably widened. To have another approach on the southern side, a new road will be formed |

| | | |
|---|---|---|
| | | from $SH_{51}$ available at 8Km from the IE location. |
| Nearness to Railway Line | Weightage | Gummidipondi |
| | Justification | Any heavy load of raw materials requirement for Enterprises can be transported through rails |
| Availability of Land and Land Costs | Weightage | Poramobokke land -1127 acres classified as Grazing land |
| | Justification | The entire 1127 acres is unhabitated and barren |
| **SOCIO-ECONOMIC PARAMETERS** | | |
| Skilled Manpower Availability | Weightage | Nil |
| | Justification | The available man power can be trained to suit the required level of the proposed IE industries. |
| Nearness to Major Settlement | Weightage | Gummidipondi – 11 Km |
| | Justification | Quite away |
| Contribution to balanced industrial development | Weightage | Chennai metro – 51 KM,<br>Manali industrial duster 20 Km<br>SIPCOT, Gummidipoondi 12 Km |
| | Justification | Will enable to spread the industrial development in the balanced way |
| Social acceptance to the proposed estate development | Weightage | Encouraging |
| | Justification | Employment and infrastructural facilities like roads water supply etc., |

அட்டவணை 1.2

**BASELINE STATUS OF VECS**

| S.No. | Value Environmental Componants | Results of Objective Tests | Professional Judgment |
|---|---|---|---|
| 1 | Micro Meteorology | Wind Direction : NW and SE (Predominant)<br>Speed :<br>Rainfall : Nil<br>Temperature : **21.8°C-36.2°C**<br>Humidity : **61-89%**<br>Inversion : Nil | Calm, quite and have no disturbance by Nature |
| 2 | Air | Ambient Air Quality (24 hrs –98%)<br>SPM : **32.39-38.34** µg/m$^3$<br>$SO_2$ : **4.26-8.23** µg/m$^3$<br>NOx: **8.48-9.99** µg/m$^3$<br>$NH_3$: Nil, CO : Nil | Un polluted, serene, pure ambient air shed |
| 3 | Water | Surface Sources: Arani river and **3** number of Eri<br>**64** numbers of small ponds<br>Sub surface source : Yield **5.4** to **7.2** m$^3$/hr | Poor water sources |
| 4 | Soil | Plain terrain, red gravel, well formed | Plain, No filling or excavation is required. Has good SBC at 20-25 t/sq.m. |
| 5 | Noise | Ambient Noise Night : **30.92-35.28 d(B)**<br>Day : **34.22-38.47 d(B)** | Un polluted ambience |
| 6 | Biologicals | No national Parks or endangered species, in the Reserve forests | The reverse forests are dry and have no species of significance or facing extinction. |
| 7 | Human | Population Density:**1.0029** per sq.Km<br>Male Female Ratio : **1.021: 1**<br>Iiteracy Ratio : **1.73 :1** | Social status will improve by Direct/Indirect employment, road facilities improved water supply etc., |

விண்ணப்பதாரர்களின் தேவையை பொருத்து 1127 ஏக்கர் நிலப்பரப்பானது தொழிற்மனையாக வகுக்கப்பட உள்ளது. தற்போது, நான்கு தொழிற்சாலைகளுக்கு மட்டும் ரீணூஊணளீநுவீ மனை கொள்கைகளின்படி நிலங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை மனைகளின் வகுபாட்டினை **படம் 1.3-ல்** காண்க.

தொழிற்முனையும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் திட்ட செயல்கள் **அட்டவணை1.3-ல்** வரிசைபடுத்தப்பட்டுள்ளது.

வரிசைப்படுத்தப்பட்ட தொழிற் நிறுவனங்கள் அனைத்தும் தனது செயல்களிலும், அமைய இருக்கும் தொழிற்சாலைகளின் விரிவாக்கத்திற்கு தேவையான அனைத்தையும் செய்ய தர உறுதி பூண்டுள்ளது.

உற்பத்தியின் குறிப்பு, வளம், மற்றும் ஆற்றல் ஆகியவைகளை சமர்பிக்கும்படி தொழிற்சாலைகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தொழிற் நிறுவனங்கள் நவீன தொழிற்நுட்பங்களை, வளங்களை பாதுகாக்கவும் பசுமை, உற்பத்தியை சார்ந்தும், தரமான பொருளை உறுதிசெய்யவும் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு ஆகியவற்றை உறுதி செய்யவும் செம்மைபடுத்தி கேட்டுக் கொள்ள பட்டிருக்கிறார்கள்.

புதிய தொழிற்சாலைகள் தனது செயல்களுக்கு உள்ளூர் வளங்கள், மூலப்பொருட்கள் மற்றும் மனித வளங்களுக்கு முன்னுரிமை அளிக்கும்.

**1.6. தாக்கத்தின் மதிப்பீடு, தடுப்பு மற்றும் கட்டுப்பாடு**

தேர்விடத்திற்கு உகந்த வகையில் தொழில் முனையும் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட உள்ளது. இத்தொழிற்சாலைகளானது அதிக நீர் தேவையற்ற வகையை சார்ந்தவை. உத்தேசிக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் இருந்து, பெரிய அளவிலான புகை கழிவு போக்கிகள் ஏதும் இல்லை. சிறிய புகை போக்கியிலிருந்து வெளியேறும் கழிவுகள் கட்டுப்படுத்தப்பட உள்ளது. வெளியேற்றப்படும் புகையில் SPM, $SO_2$, NOx போன்ற மாசுக்கள் அனுமதிக்கப்பட்ட அளவீட்டுக்குள் கட்டுப்படுத்தப்படும். ஒவ்வொரு புகை போக்கியிலும் மாசுக் கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்தப்படும்.

**SIPCOT INDUSTRIAL PARK**
THERVOYKANDIGAI




**FIG.1.3 CONCEPTUAL LAYOUT OF PLOTS**

அட்டவணை 1.3

## SUMMARY OF APPLICANT ENTERPRISES

| Sl.No. | Enterprise | Category of Industry | Type of Industry | Products | Production capacity MT/Year |
|---|---|---|---|---|---|
| 1 | Michelin India TamilNadu Tyres Private Limited.<br>1-9, Sintroth square, VSI Estate, Old Mahabalipuram Road, Thiruvanniyur,<br>Chennai-600 041<br>Ph:44—4340-3500<br>Email: nicolas.beaumont@in_michelin.com | Synthetic rubber | Large | Radial tyres for trucks/cars | 3,00,000 |
| 2 | Hunter Donglas India Private Limited<br>Cor. Office: C102, Mangalya, Mano Maroshi Road, Andheri (E), Mumbai – 400 059.<br>Email: Swami@hunterdouglas.in | Engineering Industry | Medium | Metal ceilings,metal claddings, sun louvers and window Blinds (Aluminum and Ferrous Alloy Metal Members) | 1000 |
| 3 | Harsha Exito Engineering Private Limited<br>No1, Tass Industrial Estate, Ambatterr SIDCO<br>M.G. Road, Chennai – 600 098.<br>Email:Nathans@harshagroup.net | Engineering Industry | Large | Heavy Engineering Equipments & Components for Oil, Gas, Power and Other Process Industries. | 1800 |
| 4 | Harsha Float Glass India Private Limited<br>No1, Tass Industrial Estate,<br>Ambattur SIDCO,M.G. Road,<br>Chennai – 600 098.<br>Email:aman@harshagroup.net | Glass Industries | Large | Float glass with on line reflective and Tinted Coating | 1,65,000 |

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் மறு பயன்பாட்டிற்கு மீட்கப்பட இருக்கிறது. எனவே தொழிற்சாலைகளில் இருந்து எந்தவிதமான சுத்திகரிக்கப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வெளியேற்றப்பட மாட்டாது.

தொழிற்சாலைகளில் இருந்து பெறப்படும் திடக்கழிவுகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து பெறப்படும் திடக்கழிவு தற்காலிகமாக சேகரிக்கப்பட்டு மேலாண்மை விதியின்படி வெளியேற்றப்பட்டு, திடக்கழிவுகள் மேலாண்மை நிறுவனங்களுக்கு அனுப்பப்படும். தொழிற்பேட்டை செயல்பாட்டுகளின் பாதிப்புகள், **அட்டவணை 1.4-ல்** விளக்கப்பட்டுள்ளது.

### 1.7. சுற்றுச்சூழல் மேலான்மைத் திட்டம்

SIPCOT சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் ஒன்றை வடிவமைத்து செயல்படுத்த இருக்கிறது. மத்திய மற்றும் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் மற்றும் நெறிமுறைகளை, SIPCOT உறுதியாக பின்பற்றுவதற்கு சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மூன்று வெவ்வேறு பிரிவுகளில் வடிவமைத்து வருகிறது. அவை முறையே,

1. திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்
2. கட்டுமானம்
3. இயக்குதல் மற்றும் பராமரிப்பு

SIPCOT தனது தலைமை நிர்வாக அலுவலகம் மற்றும்தொழில் பூங்கா அமையும் இடத்தில் இருந்து சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒரு தனி அலுவலகத்தையும் மற்றும் தேவையான அலுவலர்களையும் ஏற்படுத்தும்.

மத்திய மற்றும் மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் நெறிமுறைகளுக்கேற்ப சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்த உறுப்பு தொழிற்சாலைகளின் ஒத்துழைப்பை பெற வேண்டியுள்ளது.

SIPCOT-ல் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தின் பொதுவான பொறுப்புகள் யாதெனில்,

1. இடர் மேலாண்மை
2. பேரிடர் மேலாண்மை

அட்டவணை 1.4

## IMPACT ANALYSIS & ASSESSMENT

| Sl. No. | Applicant Enterprises | Water Environment | | | | Air Environment | | | Soil Environment | | Noise Environment | Human Environment | | Biological Environment | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Water (KLD) | Wastewater (KLD) | | Disposal of Treated effluent | Point Sources | | Fugitive dust | Solidwaste MT/year | | | Employees | Occupational Health Hazards | Area Development (acres) | Cutting of tress |
| | | | Trade Effluent | Sewage | | Processes | Utilities | | Hazardous waste | Non Hazardous waste | | | | | |
| 1 | Michelin India TamilNadu Tyres Private Limited. | 1500 | 1155 | 95 | NIL | NIL | DG Set | Carbon black, rubber and metal | 50000 | 150 | Nil | 1500 | Dust allergy carcinogenic | 290 | Nil |
| 2 | Hunter Douglas India Private Limited | 25 | 5 | 5 | NIL | Powder Coating **Insignificant** | DG Set | Metal alloys | 0.5 | 2.5 | Nil | 60 | Nil | 15 | Nil |
| 3 | Harsha Exito Engineering Private Limited | 150 | 43 | 46 | NIL | Painting Booth Sand Blasting **Insignificant** | DG Set | Paint Sand | 6.5 | 12.5 | Nil | 1000 | Nil | 25 | Nil |
| 4 | Harsha Float Glass India Private Limited | 450 | 280 | 21 | NIL | Furnace **Insignificant** | DG Set Boiler | Mineral | 600 | 10 | Nil | 5000 | Nil | 85 | Nil |

3. அவசர கால திட்ட மேலாண்மை (நிறுவனத்திற்கு உட்பட்ட பகுதி / நிறுவனத்திற்கு வெளியே)

4. பசுமை அபிவிருத்தி திட்டம்

5. நிலத்தடி நீர் சேமிப்பு

6. சாலை மற்றும் பாதுகாப்பு

மாநில மாசு கட்டுப்பாட்டின் வாரியத்தின் முறையான கண்காணிப்பு மற்றும் சிப்காட் நிறுவனத்தின் நேரடி கண்காணிப்பில் இவையனைத்தும் ஏற்படுத்தப்படும்.

**1.8. சமூக தாக்க மதிப்பீடு**

தொழிற் வளாகம் அமைய இருக்கும் இடத்தில் உள்ள 1127 ஏக்கர் பரப்பளவு கொண்ட தொழிற்பேட்டை வெற்றிடமாகவும் ஆக்கிரமிப்பு இல்லாததாகவும் உள்ளது. இதன்காரணமாக மக்ளை வெளியேற்றவோ அல்லது மறுவாழ்வு மற்றும் மறு புரணமைப்பு திட்டங்கள் தேவையில்லை.

எனினும் 100 ஏக்கர் நிலத்தை தீவன மேம்பாட்டிற்குப் மற்றும் அருகில் உள்ள கிராம மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்கும் ஒதுக்கியுள்ளது. இந்த மேய்ச்சல் நிலங்களை SIPCOT நிறுவனம் ஏற்படுத்தி கிராம பஞ்சாயத்துகளின் பாதுகாப்பில் மக்களின் நேரடி பயன்பாட்டிற்கு தந்துவிடும். இதன் காரணமாக உள்ளூர் வாசிகளின கால்நடைகள் பாதிக்கப்படாமல் உணவு தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

உறுப்பு தொழிற் நிறுவனங்கள் SIPCOT-ற்கு அருகில் உள்ள வளங்களை தனது செயல்பாட்டிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உபயோகிக்கும்.

உறுப்பு தொழிற்சாலைகளின் ஒத்துழைப்புடன் SIPCOT நிறுவனம் "பொது சுகாதார கண்காணிப்பு திட்டத்தை" அருகில் உள்ள சமுதாய மக்களின் உடல் நலன்காக்க தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தும்.

மக்களின் சமூக மற்றும் சமயம் சார்ந்த செயல்பாடுகளில் உறுப்பு தொழிற் நிறுவனங்கள் மற்றும் SIPCOT ஒருபோதும் தலையிடாது.

### 1.9. இடர் மற்றும் பேரழிவு மேலாண்மைத் திட்டம்

அபாயகரமான இரசாயன பொருட்களோ அல்லது வெளியேறும் வாயுக்களின் பயன்பாடுகளோ அமையவிற்கும் தொழிற்சாலைகளில் எதுவும் இல்லை. நச்சு வாயுக்கள் மற்றும் பொருட்களை வெளியிடும் எந்தவித செயல்பாடுகளும் இல்லை.

கட்டிடங்களுக்குள் ஏற்படும் எதிர்பாராத சம்பவங்கள் "விபத்து" என மதிப்பீடப்படுகிறது. கட்டிடங்களில் ஏற்படும் விபத்தை அபாயகரமானதாக மதிப்பிடப்படுகிறது. இவைகள் பௌதீக சிதைவு மற்றும் தொழில் வளர்ச்சி ஆரோக்கியத்திற்கு ஆபத்தை உருவாக்குகிறது.

அவசர மேலாண்மைத் திட்டத்தின் ஒரு பங்காக தீ மற்றும் விபத்து போன்றவைகளை சமாளிக்க தொழிற்பேட்டையிலும் வெளியிடங்களிலும் தயார் நிலையில் இருக்க தொழிற்நிறுவனங்கள் மற்றும் சிப்காட் நிறுவனமும் "சிறப்பு கட்டுப்பாட்டு கட்டமைப்புகளை" ஏற்படுத்தி வைத்திருக்கும்.

இந்த தொழிற்பேட்டை அமைய உள்ள இடத்தில் எந்த வகையான இயற்கை அழிவுகளை உருவாக்கும் சூழ்நிலைகளும் இல்லை. இதுவரை ஆரணி என்ற நதி தொழிற்பேட்டையின் 10 கி.மீ. பரப்பளவிற்குள் அமைந்த போதும் வெள்ளம் மற்றும் சூராவளி போன்ற நிகழ்வுகள் பதிவு செய்யப்படவில்லை.

சிப்காட் தீ கட்டுப்பாடு குழு ஒன்றை, தமிழ்நாடு தீயணைப்பு நிறுவனத்தின் மூலமாக நிர்மானித்து, அதற்கு தேவையான உபகரணங்களுடன் பராமரித்து வரும்.

### 1.10. உட்கட்டமைப்பு, சாலை மற்றும் போக்குவரத்து

தொழில் சார்ந்த கட்டமைப்புகள் கிராம பஞ்சாயத்துகளின் அனுமதி பெற்றே ஏற்படுத்தப்படும். இந்த தொழிற்பேட்டையின் உட்கட்ட சாலைகளானது அனைத்து தொழிற்சாலகளையும் இணைக்கும் வண்ணம் இருவழி சாலைகளக 12 மீ அகலத்தில் இருபுறமும் ஏற்படுத்தப்பட உள்ளது. (மொத்த அகலமானது 24 மீட்டர்)

சாலையின் நடுவே தேவையான பசுமை தொடர், போக்குவரத்தை சீரமைக்க ஒவ்வொரு சாலை சந்திப்பிலும் தானியங்கி போக்குவரத்து சமிக்கைகள் ஆகியவை அமைக்கப்பட்டு போக்குவரத்து செம்மைப்படுத்தப்படும். தொழிற் நிறுவனங்களுக்கும் அவரவர்கள் தேவைக்கேற்ப சேவை சாலகளை

முக்கிய சாலைகளின் பக்கமாக தங்களது சொந்த வாகனங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்துக் கொள்ள ஏற்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்படும்.

**1.11. பசுமை அபிவிருத்தி திட்டம்**

SIPCOT நிறுவனம் அதன் நான்கு பக்க எல்லைகளிலும் பசுமை அபிவிருத்தியாக 40 மீட்டர் அகலத்தில் பசுமைகாட்டினை ஏற்படுத்தி, நிர்வகித்து வரும். உட்சாலைகளின் இருபக்கங்களிலும், மரங்கள், மூலிகைகள் மற்றும் செடிகொடிகள் கொண்ட பசுமை நிலங்கள் ஏற்படுத்தப்படும்.

**1.12. சுற்றுச்சூழல் மேலாண்மைப் பிரிவு**

சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தவும், மேற்பார்வையிடவும், தனி திறமை வாய்ந்த மற்றும் தனிப்பயிற்சி பெற்ற நபர்களைப் பெற்ற "மேலாளர் குழு" ஒன்று அமைக்கப்படும்.

இந்த அமைப்பு நிதி உதவிகளை தொழிற்பேட்டை நிர்வாகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும். சுற்றுச்சூழல் மேலாண்மை பிரிவின் செயல்பாடுகளை நிர்வகிக்க ஒவ்வொரு நிறுவனத்தில் இருந்தும் தலா ஒரு மேலாளர் நியமிக்கப்படுவர். சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டிற்கு ஆய்வுக்கூடம் மற்றும் நூலக வசதிகள் செய்யப்பட உள்ளது. இதன் கட்டமைப்பு **படம் 1.4-ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**1.13. முடிவுரை**

கும்மிடிப்பூண்டி தாலுக்கா, தேர்வாய் கண்டிகையில் அமையவுள்ள தொழில் பூங்கா, சிறப்பான வளர்ச்சியைப் பெற்று, இயற்கை வளங்களையும், சமூக உயர்வினையும் செம்மையாக பெறவும், SIPCOT தொடர்ந்து தனது பங்களிப்பை தரும்.

படம் 1.4

**PROTOCOL OF ENVIRONMENTAL CELL**

**SIPCOT-Industrial Park**
**Thervoykandigai**

